**CC.No.10/2019 (JM.No.II, DHARMAPURI)**

**01.12.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜரில்லை)**

**PW– 3 : திரு.அய்யனார் (எ) அய்யண்ணன் , த/பெ.சந்திரன்**

**முதல் விசாரணை**

நான் அச்சப்பட்டியில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன பொன்னுசாமியை எனக்கு விபத்தின்போது தெரியும். 2018ஆம் வருடம் ஒரு நாள் மேச்சேரியில் இருந்து என்னுடைய வேலையை முடித்துவிட்டு இரவு 11.00 மணிக்கு தருமபுரி நோக்கி வரும் போது, கட்டமேட்டு அருகே ஈச்சர் வாகனத்தின் அடியில் லைட் அடித்து நான் பார்த்த போது அதில் ஒரு நபர் ஈச்சர் வாகனத்தில் மாட்டிக்கொண்டு கிழே கிடந்தார். அங்கு நபர்கள் யாரும் இல்லாததால் நான் 100க்கு போன் செய்தும், தொப்பூர் காவல் நிலையத்திற்கும் போன் செய்தும் தகவல் தெரிவித்தேன். 108 ஆம்புலன்ஸ் சம்பவயிடத்திற்கு வந்தது. இறந்து போன பொன்னுசாமியை பரிசோதனை செய்துவிட்டு இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். அவருடைய போனை எடுத்து, அவருடைய வீட்டிற்கு நான் தகவல் சொன்னேன். இந்த விபத்து எப்படி நடந்தது என்று நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து நடந்து சிறிது நேரத்திற்குள் நான் பார்தேன், அப்போது ஈச்சர் வாகனத்தின் ஓட்டுனர் இறங்கி ஒடிகொண்டிருந்தார். இந்த விபத்தில் காயம்பட்ட பொன்னுசாமி பெரு மூச்சு இழுத்து கொண்டு சம்பவயிடத்தில் கிடந்தார். நான் ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி பத்து நிமிடத்திற்குள் சம்பவயிடத்திற்கு வந்தது. அப்போது பரிசோதனை செய்த போது இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். இது சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து நடந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய நபரை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட்ட இருசக்கர வாகனத்தில் வந்தவர் எந்த திசையில் இருந்து வந்தார் என்றால் சரிதான். விபத்து நடந்த பிறகு தான் சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியதை தான் போலிஸார் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து பூரிக்கல் செல்லும் சாலை என்றால் சரிதான். பிக்ஆப் வாகனம் பூரிக்கல் நோக்கி செல்லும் திசையில் நின்றுகொண்டிருந்தது என்றால் சரிதான். இருசக்கர வாகனம் எதிர் திசையில் வந்தது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பூரிக்கல்லிருந்து தருமபுரி செல்ல வேண்டும் என்றால் விபத்து நடந்த இடத்திலிருந்து வடக்கு பக்கமாக சாலையில் செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2025.12.01 17:33:59 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,

தருமபுரி.

CC.No.10/2019 (JM.No.II, DHARMAPURI)

01.12.2025

சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜரில்லை)

PW–4 : திரு.எழில்குமரன், த/பெ.பொன்னுசாமி.

முதல் விசாரணை

நான் பாளையம்புதுார் குடியிருந்து ஒட்டுனராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன பொன்னுசாமி என்னுடைய அப்பா ஆவார். அ.சா.1 என்னுடைய அம்மா ஆவார். 02.08.2018ஆம் வருடம் நான் ஓசூரில் வேலை செய்து கொண்டிருந்த போது அன்றை இரவு 11.45 மணிக்கு என்னுடைய போனில் மூலம் என்னுடைய அப்பா இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். மறுநாள் காலை தருமபுரி அரசு மருத்துவமனையில் வந்து பார்த்த போது என்னுடைய அப்பா இறந்த நிலையில் இருந்தார். என் முன்னிலையில் தான் பிரேத விசாரணை நடைபெற்றது. இது சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து நடந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். போலிஸார் என்னை 03.08.2018 அன்று காலை 07.00 மணியளவில் விசாரித்தார்கள். விபத்தின் போது என்னுடைய அப்பா சேலத்திலிருந்து பாயைம்புதுாருக்கு வந்தார். போலிஸார் விசாரணையில் நான் மேற்படி தான் கூறினேன் என்றால் சரிதான். விபத்தில் என்னுடைய அப்பா தான் அஜாக்கிரதையாக வந்து பிக்ஆப் வாகனம் மீது மோதி விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனம் SML என்ற 6 வீல் கொண்ட வாகனமாகும். என்னுடைய அப்பா ஓட்டிக்கொணட் இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு, பதிவுச்சான்று இல்லை என்றால் சரியல்ல. பதிவுச்சான்று இருந்தது, காப்பீடு மட்டும் இல்லை. என்னுடைய அப்பாவிற்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய அப்பாவிற்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றாலும், அப்படி இருந்து இருந்தால் நான் போலிஸார் ஒப்படைத்துயிருப்பேன் என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. விபத்து சமயத்தில் என்னுடைய அப்பா தலைக்கவசம் அணியதது தான் காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் இழப்பீடு பெற வேண்டி பொய்யான புகாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2025.12.01 17:33:40 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.